பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: வைகாசி 11 (24—5—68) வெள்ளி ★ வெளியூர்: வைகாசி 12 (25—5—68) சனி [இதழ்: 285

தேனீக்கள் சீற்றம்!

30 பேருக்குக் கொட்டுக் காயம்

டோக்கியோ, மே 23—

150 தேனீப் பெட்டிகளை ஏற்றிச் சென்ற டிரக் வண்டியொன்று கவிழ்ந்ததால், தேனீப் பெட்டிகளிலிருந்து பத்து இலட்சத்துக்கு மேற்பட்ட தேனீக்கள் வெளிப்பட்டு அருகிலிருந்த அனைவரையும் கொட்ட ஆரம்பித்துவிட்டன. அந்தத் தேனீப் பெட்டிக்குச் சொந்தக்காரர்கள், போலீசுக்காரர்கள் உட்பட கண்ணுக்குத் தெரிந்த யாரையும் விட்டு வைக்கவில்லை. இரண்டு மணி நேரப் போராட்டத்துக்குப் பின், ஓர் இராணித் தேனீயின் உதவி கொண்டு அத்தேனீக்கள் கட்டுப்படுத்தப்பட்டன. இதனால் 30 பேர்கள் கடுமையாகக் கொட்டப்பட்டு அவதிக்குள்ளானார்கள்.

பேச்சுவார்த்தை திருப்தியளித்தது

இரு தரப்புக் கோரிக்கைகளையும் கேட்டறிந்தேன்

ஆலை அதிபர்கள்--தொழிலாளர்களிடம் பேசியது பற்றி முதலமைச்சர் அண்ணா

திருச்சி, மே 23

"மூடப்பட்ட ஆலைகளை அரசு ஏற்பதற்காகத் தனியாக அவசரச் சட்டம் பிறப்பிக்கவேண்டிய அவசியமில்லை; தொழில் வளர்ச்சி--ஒழுங்கு முறைச் சட்டத்தின் கீழேயே மூடப்பட்ட ஆலைகளை ஏற்க முடியும்.

"'மூடப்பட்ட 5 ஆலைகளைத் திறப்பதில்தான் தமிழக அரசு அக்கறை செலுத்துகிறது' என்று சிலர் கூறுகிறார்கள்; அது தவறு. மத்திய அரசு அமைத்துள்ள நூற்பாலைக் குழு, மூடப்பட்டுள்ள 21 ஆலைகளைப் பற்றிய பிரச்சினைகளையும் பரிசீலனை செய்யத் தயாராக இருக்குமானால், அதனை மாநில அரசு வரவேற்கும்"

இவ்வாறு அண்ணா அவர்கள், கோவை ஆலைகள் பிரச்சினை பற்றி ஆலை அதிபர்களுடனும்—தொழிலாளர் பிரதிநிதிகளுடனும் நடைபெற்ற பேச்சுவார்த்தைக்குப்பின் கூறினார். மேலும் அவர் குறிப்பிட்டிருப்பதாவது:—

"இரு தரப்பினரும் தங்கள் குறைகளை எடுத்துச் சொன்னார்கள்; 'மத்திய அரசு நூல்மீது விதித்துள்ள தாங்கமுடியாத வரியை நீக்கவேண்டும்' என்று ஆலை அதிபர்கள் கேட்டுக் கொண்டனர்; 'இது பற்றி மத்திய அரசை வற்புறுத்தி ஆவன செய்கிறேன்' என உறுதி கூறினேன்; 'சில ஆலைகளில் நிதி நிலைமை சரியாக இல்லை' என்று சொன்னார்கள்; 'இக்கோரிக்கை கவனிக்கப்படும்' என்று கூறினேன்.

"மூடப்பட்ட ஆலைகள் பற்றி ஆராய ஏற்கனவே ஒரு குழு அமைக்கப்பட்டு உள்ளது; இப்போதுள்ள புதிய நெருக்கடி பற்றி ஆலோசிக்க இன்னொரு குழு அமைக்கவேண்டியது அவசியமாகிறது. குழு அமைக்க டெல்லிக்குச் சிபாரிசு செய்வேன். குழுத் தலைவரை டெல்லி நியமிக்கும்.

"தொழிலாளர்கள், தங்கள் பிராவிடண்டு தொகையிலிருந்து ஏற்கனவே கடன் வாங்கிவிட்டார்கள்; 'அதிபர்கள் போடும் பங்கிலிருந்து மாதம் ரூ. 100 வீதம் கடனாகத் தரவேண்டும்' என்று கேட்கிறார்கள்; 'இதுபற்றி பிராவிடண்டு நிதிக் கமிஷனருக்கும், டெல்லி அரசுக்கும் சிபாரிசு செய்வேன்' என்று கூறினேன். மொத்தத்தில் பேச்சுவார்த்தை திருப்தியளிப்பதாக இருந்தது."

தமிழகத்து நூற்பாலைகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் பற்றி இன்று நள்ளிரவுக்கு மேலும் அண்ணா அவர்கள் இங்கு தொழிலாளர் பிரதிநிதிகளுடனும்—ஆலை அதிபர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தினார்.

பேச்சுவார்த்தைகளின் போது, சட்ட அமைச்சர் செ. மாதவன், சட்டப் பேரவைத் தலைவர் ஆதித்தனார், மற்றும் அரசு அதிகாரிகளும் உடனிருந்தனர்.

தமிழகத்தில் மூடப்பட்டுள்ள 21 நூற்பாலைகளைத் திறப்பது பற்றிப் பேச்சு நடத்தத் தொழிற் சங்கத் தலைவர்களையும், ஆலை உரிமையாளர்கள் சங்கப் பிரதிநிதிகளையும் அண்ணா அவர்கள் திருச்சிக்கு வருமாறு அழைத்திருந்தார். அதையொட்டி இன்று இரவு பேச்சுவார்த்தை துவங்கியது.

திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம், இந்திய தேசியத் தொழிற் சங்கக் காங்கிரசு, இந்த் மஸ்தூர் சபா, அகில இந்திய தொழிற் சங்கக் காங்கிரசு, சுதந்தரா தொழிற் சங்கம் ஆகிய தொழிற் சங்கங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

தென்னிந்திய ஆலை அதிபர்கள் சங்கப் பிரதிநிதிகளும் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டனர்.

தொழிலாளர் பிரதிநிதிகள், கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றையும் அண்ணா அவர்களிடம் அளித்தனர்.

சென்னை வருகை தள்ளிவைப்பு

திருச்சியில் பேச்சுவார்த்தைகளை முடித்துவிட்டு வியாழனன்று இரவே முதலமைச்சர் அண்ணா அவர்கள், இரயில் மூலம் சென்னைக்குத் திரும்புவதாகத் திட்டமிட்டிருந்தார்; ஆனால் இரவு 8 மணி முதல் 10மணிவரையில் நூற்பாலை அதிபர்களுடன் பேசிவிட்டு, அதற்குப் பின் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் பேசத் துவங்கினார். பேச்சுவார்த்தை நள்ளிரவு வரை நீடித்ததால், அண்ணா அவர்கள் சென்னை திரும்பும் திட்டத்தைத் தள்ளிவைத்து, தொடர்ந்து தொழிற்சங்கத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திவருகிறார்.

மருத்துவமனையில் சிகிச்சை பெறும் அமைச்சர் ஏ. கோவிந்தசாமி

பெரியார் சந்தித்து உடல்நலம் பற்றி விசாரித்தார்

சென்னை, மே 23—

வயிற்று நோயினால் சென்னைப் பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் தமிழக விவசாயத் துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்களை இன்று மாலை 6-மணிக்கு பெரியார்—மணியம்மை ஆகியோர் மருத்துவமனைக்குச் சென்று கண்டு உடல் நலம் பற்றி விசாரித்தார்கள்.

அமைச்சர் ஏ. கோவிந்தசாமிக்கு நேற்று 2-வது முறையாக 'எக்ஸ்ரே' எடுக்கப்பட்டது.

உணவமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள், நேற்று மருத்துவமனைக்குச் சென்று அமைச்சர் கோவிந்தசாமியைக் கண்டு உடல்நலம் விசாரித்தார்.

கோவையில் அரிசி நிலவரம்

முழு அளவில் மலிவு விலை அரிசி கிடைக்கும்

கோவை, மே 23—

"இரண்டாவது ரக அரிசி வழங்கும் நிலைமை தற்போது மன நிறைவு தருவதாக இருக்கிறது; எனவே, பங்கீட்டுக் கார்டு வைத்திருப்பவர்கள், குறைந்த விலை அரிசியை முழு அளவில் கோரினால் அவர்களுக்கு இரண்டாவது ரக அரிசியை குறைந்த விலையில் வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டிருக்கிறது"

என்று மாவட்ட கலெக்டர் அம்புரோஸ் செய்திக் குறிப்பு ஒன்றில் கூறியிருக்கிறார்.

கார்டு வைத்திருப்பவர்கள் முதல் ரக அரிசி கோரினால் அவர்களது தேவைப்படி அரிசி வழங்கப்படும்; எனவே குறைந்த விலை அரிசி (ரூபாய்க்குப் படி அரிசி) வழங்குவதை மூன்றில் ஒரு பங்கு குறைக்கும் திட்டம் கைவிடப்பட்டது.

மதுரையில் அறிஞர் அண்ணாவுக்கு மகத்தான வரவேற்பு!

இரயில் நிலையத்தில் பல்லாயிரவர் திரண்டிருந்து வரவேற்றனர்

வழிநெடுகிலும் மக்கள் கூட்டம்-- விண்ணை முட்டும் வாழ்த்து முழக்கம்

மதுரை, மே 23—

வெளிநாடுகளில் சுற்றுப்பயணம் செய்து திரும்பிய பின், மதுரை நகருக்கு முதன் முதலாக வருகைதந்த முதலமைச்சர் அண்ணா அவர்களுக்கு மதுரை மக்கள் இன்று மகத்தான வரவேற்பு அளித்தனர்.

சென்னையிலிருந்து இரயில் மூலம் மதுரை இரயில் நிலையத்தில் வந்திறங்கிய அண்ணா அவர்களை, பல்லாயிரக் கணக்கானோர் கூடிநின்று வாழ்த்தொலி முழங்கி வரவேற்றனர்.

பொதுமக்களும் கழகத் தோழர்களும் அண்ணாவைக் காண இரயில் நிலையத்துக்கு வெளியே திரண்டிருந்தனர். எங்கு நோக்கினும் கழகக் கொடிகளாகவே இருந்தன.

இரயில் நிலையத்துக்குமுன் அமைக்கப்பட்டிருந்த மேடையின்மீது அறிஞர் அண்ணா அவர்கள் ஏறி நின்று சிறிது நேரம் பேசினார். தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்தார்.

அண்ணாவின் உரையை அனைவரும் சரியாகக் கேட்க முடியாதபடி அவ்வளவு வாழ்த்தொலி ஆரவாரம் இருந்தது.

அண்ணா அவர்கள் சென்ற வழியெல்லாம் சாலையின் இருபுறமும் ஆயிரக்கணக்கில் மக்கள் கூடிநின்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

மாவட்டச் செயலாளர் எஸ். முத்து எம்.எல்.சி. அவர்கள், முதலமைச்சர் அண்ணா அவர்களுக்கும், பொதுப்பணி அமைச்சர் மு. கருணாநிதி அவர்களுக்கும் மாலை அணிவித்து வரவேற்றார். மற்றும் ஏராளமானோர் மாலை அணிவித்தனர்.

அண்ணா திறந்த ஜீப் காரில் நின்றபடி 'சர்கியூட் அவுசு'க்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

ஊர்வலம் சென்ற பாதைகளிலெல்லாம் போக்குவரத்துக்கள் நிறுத்திவைக்கப்பட்டன.

காலையில் கைது--- மாலையில் விடுதலை

மதுரை, மே 24—

தடுப்பு நடவடிக்கையாகப் போலீசார் இங்கு நேற்றுக் காலையில் கைது செய்த 382 காங்கிரசுக்காரர்களை, மாலையிலேயே விடுதலை செய்து விட்டனர்.

நிராகரித்தனர்!

புதுடில்லி, மே 24—

தலைமையமைச்சரும், துணைத் தலைமையமைச்சரும் ஆலோசனை கூறியதன் மீது, வெளிநாடுகளுக்குச் செல்லும் அழைப்புக்களை, அமைச்சர்கள் அசோக் மேத்தாவும், டாக்டர் வி. கே. ஆர். வி. ராவும் நிராகரித்துவிட்டனராம்!

ஒப்பந்தத்தை மீறும் பஸ் அதிபர்கள்

'விளைவை அனுபவிக்க நேரிடும்'--- அமைச்சர் மு. கருணாநிதி எச்சரிக்கை

மதுரை, மே 23—

"தனியார் பஸ்களில் கட்டணங்களைக் குறைப்பது பற்றி அரசாங்கத்துடன் பஸ் அதிபர்கள் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளனர். இந்த ஒப்பந்தத்துக்கு விரோதமாகப் பஸ் அதிபர்கள் நடந்துகொண்டால், அதன் விளைவுகளை அவர்கள் அனுபவிக்க வேண்டிவரும்"

என்று பொதுப்பணி அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள், மதுரையில் செய்தியாளர்களிடம் கூறினார்.

ஒரு கிலோ மீட்டர் தூரத்துக்கு மூன்று காசுகள் என்று இருக்கும் கட்டணத்தை இரண்டரைக் காசுகளாகக் குறைப்பதற்கு பஸ் அதிபர்கள் அரசாங்கத்திடம் ஒப்புக்கொண்டிருந்தனர் என்பது நினைவிருக்கலாம்.

நெல்லையில் ஒரு பஸ் அதிபர் முப்பது பஸ்களை திரும்பப் பெற்றுவிட்டது பற்றி அமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில் குறிப்பிட்டதாவது:—

"இதனால் பொதுமக்களுக்கு வசதிக் குறைவு எதுவும் ஏற்படாது; மற்றொரு நிறுவனத்துக்கு பஸ் விடுவதற்கான அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது."

பட்டை தீட்டாத வைரமாக நம்முடைய வளம்!

பயன்படுத்தும் வகையறிந்தால் நாமும் முன்னேற வழியுண்டு

அயல்நாட்டில் வாழும் இந்திய மக்களிடை அண்ணு ஆய்வுரை

“சனநாயக நாட்டில் ஆட்சிகள் மாறுவது இயற்கை; இதில் பெரிய ஆச்சரியம் எதுவும் இல்லை!

“ஒருவேளை, 20 ஆண்டுகள் ஆட்சியில் இருந்தவர்களுக்கு வேண்டுமானுல், அது ஆச்சரியமாக இருக்கலாம்! அவர்களுக்குத் திகைப்பும் ஏற்பட்டிருக்கலாம்! ஏனென்ருல், ஆட்சியிலிருந்தே பழக்கமாகிவிட்டதால்!”

இவ்வாறு முதலமைச்சர் அண்ணு அவர்கள், ஹாங்காங்கில்' தமிழ்க் கலாச்சாரக் கழகத்தின் சார்பில் அளிக்கப்பட்ட வரவேற்பில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார். அவர் ஆற்றிய உரையின் முக்கியப் பகுதிகள் வருமாறு:—

பல்வேறு இனங்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பீர்!

“இங்கேயும், தமிழகத்திலேயும் இருந்த பல நல்லவர்களின் ஆதரவால், 1967 தேர்தலில் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை நாங்கள் ஏற்க முடிந்தது. இந்த நிலை, மூன்று ஆண்டிற்குள் நமக்கு ஏற்பட்டதாகும். இது நம்மிலே சிலருக்கு மகிழ்ச்சியளித்தாலும், மூன்ருண்டுகளில் நம் நாடு எப்படி முன்னேறி இருக்கிறது என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

மூன்று ஆண்டுகளில் எந்தக் கட்சி முன்னேறியிருக்கிறது—எந்தத் தலைவர் உயர்ந்து இருக்கிருர்—என்று பார்க்காமல், 'நம் நாடு எந்த அளவில் முன்னேறியிருக்கிறது' என்று சிந்தித்துப் பார்ப்பதுதான் அவசியம்.

இந்த மூன்று ஆண்டுகளில் ஜப்பான் எப்படி முன்னேறி இருக்கிறது—ஹாங்காங் எப்படி வளர்ந்திருக்கிறது—அமெரிக்கா எப்படி உயர்ந்திருக்கிறது—என்று பல்வேறு இனங்களோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

அப்படிப் பார்க்கும்போது, ‘நாம் உயரவில்லை; நம் நாடு உயரவுமில்லை' என்பதை மறுப்பது தவறு; எனினும், ‘நாம் முன்னேறிவிட்டோம்' என்று எண்ணிக்கொள்வதும் ஆபத்து!

எப்படிப் பயன்படுத்துவது என்பதுதான் கேள்வி?

நம் நாட்டில், மூன்ருண்டு முன்னேற்றம் பாராட்டத்தக்கவிதத்தில் இல்லை! முன்னேற்றம் அடையவேண்டிய வளம் அனைத்தும் நம் நாட்டில் இருக்கிறது!

இயற்கை வளம், உடல் வளம், உழைப்பு வளம், திறமை வளம் அத்தனையும் இருக்கின்றன.

இத்தனையும் பட்டை தீட்டப்படாத வைரங்களாக இருக்கின்றன! இவைகளை சரியானபடி பயன்படுத்திக் கொண்டால் நம் நாடு ஏன் வளமடையாது?

இந்த இயற்கை வளங்களை எப்படிப் பயன்படுத்துவது என்பது தான் கேள்வி!

ஏடுகளில்தான் எங்களால் பார்க்க இயலுகிறது!

உங்கள் வாழ்க்கை வளமுள்ளதாகக் காண்கிறேன். நம்மவர்கள் வெளிநாடுகளில் மட்டும் சிறப்பாக இருப்பது எப்படி என்ற கேள்வியும் எழத்தான் செய்கிறது.

நம் நாட்டிற்கு நெடுந்தொலைவில் இருந்துகொண்டு எந்த வகையில் வர்த்தகத்திலும், முன்னேற்றத்திலும் கண்ணுங்கருத்துமாக இருக்கிறீர்களோ, அப்படியே நம் நாட்டு முன்னேற்றத்திலும் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

உங்களுக்கு நல்ல வசதி இருக்கிறது; முன்னேற்றமுள்ள நாடுகளில் வசிக்கின்றீர்கள்; புதிய நாடுகளுக்கு மத்தியிலிருக்கும் உங்களுக்குப் புதிய எண்ணங்களும், உற்பத்திகளும் எளிதாகவும், விரைவாகவும் கிடைக்கின்றன. முன்னேற்றங்களை நேரடியாகவும் பார்த்து அறிந்து கொள்கிறீர்கள்.

நாங்களோ, அவைகளை ஏடுகளில்தான் பார்க்க முடிகிறது! அதுவும், தாமதித்து!

நேரடியாக அறிந்து புது அறிவுகளைப் பெற்ற உங்களைப் போன்றவர்களால் நம் நாடு முன்னேறவும், நாட்டு மக்கள் பயன்படவும் வாய்ப்புகள் கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டிருக்கிறேன்.

எண்ணிப்பார்க்கிறேன்-வியப்படைகிறேன்!

நம் நாட்டிலுள்ள மக்களைப் பார்த்துவிட்டு, அயல்நாடுகளில் வதியும் நம் மக்களைப் பார்க்கும் போது, 'அயல்நாடுகளில் வாழும் மக்கள் மட்டும் ஏன் சிறப்பாக இருக்கிருர்கள்? நம் நாட்டில் மட்டும் அப்படி இல்லையே?' என்று நானே எண்ணிப் பார்க்கிறேன்.

‘அமெரிக்காவிலும், ஜப்பானிலும், ஹாங்காங்கிலும் தங்கி இருக்கும்போது திறமை கொண்டு வளர முடிகிறது; இவர்களே நம் நாட்டில் இருக்கும்போது ஏன் வளர முடியவில்லை' என்று எண்ணிப் பார்க்கும்போது வியப்படைகிறேன்.

தொலைதூரத்தில் இருந்தாலும், நாளாகஆக நல்ல வழியிலே நம் தாய்நாட்டின் முன்னேற்றத்திலும் நீங்கள் கவனம் செலுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே வணிகத்தில் ஈடுபட வந்தாலும் தமிழ் மக்கள் ஒன்றுபட்டு வாழ்வதற்காகப் பயன்படும் தமிழ்க் கலாச்சாரக் கழகம் அமைந்திருப்பதைக் கண்டு மிகவும் மகிழ்கிறேன்.

தமிழ்க் கலாச்சாரக் கழகம், தமிழ் நாட்டார் சேராத கழகமாக இராமல், தமிழ் நாட்டார் சேர்ந்த கழகமாக விளங்குமென்று நம்புகிறேன்.

தமிழ்நாடு என்ருல், இப்பொழுது, தமிழகம் — ஆந்திரம்—கேரளம் — கருநாடகம் என்றுள்ள நான்கும் சேர்ந்தவைதான்.

தமிழ்நாட்டு வரலாற்றுப் பெருங் காப்பியங்களில் ஒன்ருன சிலப்பதிகாரம் இயற்றிய பேராசிரியரே சேர நாட்டைச் சேர்ந்தவர்தான்; ஆகவே, தமிழ்க் கலாச்சாரக் கழகத்தில் எல்லோரும் சேர்ந்து ஒன்றுபட வேண்டும் எனக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

எனவே, எல்லோரும் ஒன்றுபடுவதற்காக அமைந்துள்ள தமிழ்க் கலாச்சாரக் கழகத்தையும் அதை அமைத்தவர்களையும் நான் பாராட்டுகிறேன்.

இது ஒரு நல்ல அமைப்பு; இந்தத் தமிழ்க் கலாச்சாரக் கழகம் நல்ல முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது.

தமிழ்ப் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் வளர்ப்பதோடல்லாமல், நம் நாட்டின் முன்னேற்றத்தையும் கருத்தில் கொள்வார்கள் என்று நம்புகிறேன். இந்த நல்ல முயற்சியாளர்கட்கு நம் நண்பர்கள் அனைவரும் உறுதுணையாக இருக்க வேண்டும். அவர்கள் மேற்கொள்ளும் அனைத்து முயற்சிகளும் வெற்றி பெற வேண்டும்.”

உ. பி.-யில் இடைத் தேர்தல்

“உத்தரப் பிரதேச மாநிலத்தில் அடுத்த ஆண்டு பிப்ரவரியில் இடைத் தேர்தல் நடைபெறும்” என்று இந்திய தேர்தல் கமிஷனர் சென் வர்மா அறிவித்தார்.

16 அரசியல் கட்சிகளைச் சார்ந்த பிரதிநிதிகளின் கூட்டத்தில் மேற்கொண்ட ஒருமித்த முடிவு ஏற்பட்டதாகத் தெரிகிறது.

தனியார் பஸ் நிறுவனத்தின் தாராளம்!

பஸ் ஓட்டும் உரிமையைத் தானே விட்டுக்கொடுக்கிறது

திருநெல்வேலி, மே 24—நெல்லை மாவட்டத்தில் 39 பஸ்களை ஓட்டிக்கொண்டிருக்கும் தனியார் நிறுவனம் ஒன்று, தனக்கு அளிக்கப்பட்டுள்ள எல்லா வழித் தடங்களையும் சூன் 30-ந் தேதிக்குள் அவசியம் ஒப்படைத்துவிட முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

இந்நிறுவனத்திற்கு 1971-ம் ஆண்டுவரை பஸ் ஓட்டும் வழித் தடங்களுக்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தன.

இந்நிறுவனம், திருநெல்வேலி நகரத்திலும், நெல்லை — நாகர்கோவில் நகரங்களுக்கிடையிலும் பஸ்களை ஓட்டிக்கொண்டிருக்கிறது.

இந்நிறுவனம் மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கையை அடுத்து அரசு செய்யவேண்டிய பணிகள் பற்றிப் பரிசீலனை செய்யத் தமிழகப் போக்குவரத்து இயக்குநர் திரு. வெங்கட்ராமன் நேரில் அங்கு சென்று நிலைமைகளை ஆராய்ந்துவிட்டு வந்திருக்கிருர்.

சின்ன விஷயம் ‘சீ, சீ! இந்தப்பழம் புளிக்கும்!’

சின்னக் குழந்தைக்குச் சொல்லுவார்களே—‘குள்ள நரியும் திராட்சைப் பழமும்' கதை—நினைவிருக்கிறதா?

கடைசியிலே தாவித் தாவிக் குதித்துப் பார்த்து எட்டவில்லை என்றதும், ‘சீ, சீ; இந்தப் பழம் புளிக்கும்' என்று கேலி பேசிக்கொண்டே ஓடியதாம் குள்ள நரி!

மத்திய அரசில் அமைச்சராய் இருந்துவிட்டு, மீண்டும் ‘அது' கிடைக்குமா என்ற ஆசையில் உடுமலையிலிருந்து பொள்ளாச்சிக்குத் தாவி நின்று–தோற்ற பின்னர்–கௌரவத்தைக் காப்பாற்றத் தமிழ்நாடு காங்கிரசுத் தலைவராக **ஆக்கப்பட்டிருக்கும்** சி. சுப்பிரமணியனுரை நினைக்கிறபோது, இந்த ‘நரி - திராட்சை' கதைதான் நினைவுக்கு வருகிறது!

‘ஊரைப் பிடித்த சனி பிள்ளையாரையும் பிடித்துக்கொண்டது' என்பார்களே—அதுபோல், நாட்டைப் பிடித்த துரதிருஷ்டக் காங்கிரசு இன்னம் தமிழகத்தை விட்டு ஓடவில்லை!

அதிலும், **‘காடும் செடியுமில்லாத ஊருக்குக் கழுதை மூள்ளிதான் கற்பக மரம்'** என்கிற மாதிரி–இவரைப்போய்–ஏதோ, ‘மகாப் பெரிய பொருளாதார மேதை' என்று காங்கிரசுக்காரர்கள் (மன்னிக்க; அங்கேயே கருத்து வேறுபாடு உண்டு) நினைத்துக்கொண்டிருக்கிருர்கள்!

நேற்றுக்கு முந்தின நாள்தான் இவரைப் பற்றிய புகாரிலிருந்து மத்திய அரசு இவரை விடுவித்ததாகச் செய்தி வந்தது. இந்த இலட்சணத்தில், ஊராரைப் பற்றி மாலை நேரங்களில் இவர் கொட்டிக் கொட்டி அளக்கிருர்!

இவரைப் பற்றி மக்களுக்கு ஒன்றுமே தெரியாதென்று நினைத்துக்கொண்டு, தென் சென்னையில்–அதுவும் திருவல்லிக்கேணியில்–பேசும் போது அவர் குறிப்பிட்டதைக் கொஞ்சம் படியுங்களேன்:—

“எங்களுக்கு எந்த ஆசையும் இல்லை. நாங்கள் சுதந்தரம் பெற்ருேம். அரசியல் அமைப்பை அமைத்தோம். நிர்வாகப் பொறுப்புகளில் இருந்து ‘எல்லாம்' அனுபவித்துவிட்டோம்!

“இதைவிட, அனுபவிக்க வேண்டியது—பெருமை அடைய வேண்டியது ஒன்றும் இல்லை!

“நாட்டில் மக்கள் குழப்பமான நிலையில் தத்தளிப்பதிலிருந்து மீட்டு எல்லோரும் சுக வாழ்வு வாழ வேண்டும் என்பதுதான் எங்களது ஆசையாகும்.”

இந்தச் சுயபுராணம், கேட்பதற்கு நன்ருகவே இருக்கிறது!

மக்கள் சுகவாழ்வு வாழ வேண்டுமென்ற ஆசை -- இவ்வளவு காலம் இல்லாமல் -- இப்போது எங்கிருந்து வந்தது?

சரி; கொள்கை அடிப்படையில் இவர் என்ன சொல்ல முயல்கிருர்—அதை ஒன்றும் காணுமே!

‘இருபதாண்டுக் காங்கிரசு ஆட்சி–14 மாத தி.மு.க. ஆட்சி' என்றெல்லாம் பொருத்தமில்லாமல் ஒப்பிட்டு உளறுகிருரே—

20 ஆண்டுக்கால காங்கிரசு ஆட்சிக்குப் பின்னரும் தமிழர் வயிற்றுச் சோற்றுக்கு ஆலாய்ப் பறந்தார்களே—இன்று அந்த நிலையா இருக்கிறது?

காஞ்சிபுரத்தில் --- ஆர்க்காட்டில் நல்ல கார் அரிசி 2 லிட்டர் ரூ. 1·05; ரூ. 1·10 என்று விற்கிறதே! வாலாசாபாத்தில் 2 லிட்டர் 95 காசு விற்கிறதே!

‘நடைமுறை ஞானம் இல்லாத' என்று சொல்லக் கூச்சமாக இருக்கிறது—‘ஊர் நிலவரம் தெரியாத' சுப்பிரமணியனுரே! அருள்கூர்ந்து வாலாசாபாத் சென்று கேட்டுப் பாருங்கள்—‘அரிசி விலை என்ன' என்று!

இதுதான் தி.மு.க. சாதனையின் முதல் படி--

தெரிந்துகொள்ளுங்கள்!

“சுதந்தரம் பெற்றதே நாங்கள்தான்; அரசியல் அமைப்பை அமைத்ததே நாங்கள்தான்” என்று பீற்றிக்கொள்கிருரே—பிறகு ஏன், மக்கள் இவர்களை அடியோடு தூக்கி எறிந்துவிட்டார்களாம்!

‘குடப் பால் கறந்தாலும் கூரையைப் பிடுங்கித் தின்னும் பசு, வீட்டுக்கு எதற்கு?' என்றுதானே உங்களை, ‘சற்றே விலகியிரும் பிள்ளைகாள்' என்று ஒதுக்கிவிட்டார்கள் மக்கள்!

இவர், திருவல்லிக்கேணியில் திருவாய் மலர்ந்தருளியது---காங்கிரசு மேடையில் காங்கிரசுக்காரராய்த்தானே! அப்படியானுல், காங்கிரசுக்காரர்கள் ஆளும் மாநிலங்கள் உட்பட நாட்டில் எங்கும் மக்கள், சுகமாக வாழவில்லை என்பதை இவர் ஒப்புகிருரா?

‘நாட்டில் மக்கள், குழப்பமான நிலையில் தத்தளிப்பதிலிருந்து மீட்டு' என்று பேசுகிருரே ‘பெரியவர்'—அதற்கு என்ன பொருள்?

இவர்களின் ஆட்சிச் சேற்றில் அழுந்தித் திணறித் திக்குமுக்காடி, எதிர்க் கட்சிகளின் முயற்சியால் வெளியே வந்து மூச்சுவிட முயலும் பொதுமக்களைப் பார்த்து, ‘மீட்க வருகிறேன்' என்கிருர்!

தள்ளிவிட்டவரே இவர்தானே!

தள்ளியும் விட்டுத் ‘தத்தளிக்கிருர்கள்' என்றும் சொல்லி, ‘மீட்க வருகிறேன்' என்று அபயம் கூறும் அளவுக்குத் துணிவு ஏற்பட்டிருக்கிறது சுப்பிரமணியனுருக்கு!

இந்தத் துணிவுதான் காங்கிரசுக்காரரை இன்னம் வாழ வைத்துக் கொண்டிருக்கிறது!

பொதுமக்கள் ஏமாளிகள் அல்லர் என்பதை மட்டும் அவர் புரிந்துகொண்டால் போதும்!

—பூரணன்

கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி

எம். பி. பி. எஸ். பட்டத்துக்கு அங்கீகாரம்

சென்னை, மே 24—

கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் படித்து முடிச்கும் மாணவர்களுக்கு சென்னைப் பல்கலைக் கழகம் வழங்குகின்ற எம்.பி.பி.எஸ். பட்டத்தை இந்திய மருத்துவக் குழு ஏற்றுக்கொண்டிருக்கிறது.

இணைப்பு மருத்துவக் கல்லூரியாக இருந்த இக்கல்லூரியில், 1960-ம் ஆண்டு முதல் எம்.பி.பி.எஸ். பட்டப் படிப்பு ஆரம்பிக்கப்பட்டது.

இந்த இணைப்பு மருத்துவப் பாடத்திலிருந்து முதல் குழுவைச் சார்ந்த மாணவர்கள், மாற்றப்பட்ட எம்.பி.பி.எஸ். பட்டப் படிப்பில் ஈடுபட்டு ஏப். 1965-ல் வெளி வந்தனர். இரண்டாவது குழுவைச் சார்ந்த மாணவர்கள் எம்.பி.பி.எஸ். முழுப் பாடத் திட்டத்தின்படி 1965-ம் ஆண்டு டிசம்பரில் ங்கதளுடைய படிப்பை முடித்து வெளி வந்தனர்.

இதுவரையில் இம்மாதிரியான 10 குழுக்கள் எம். பி. பி எஸ். தேர்ச்சி பெற்றிருப்பதாக அறியப்படுகிறது.

‘சிவசேனை’க் குண்டர்கள் கைது!

பம்பாய், மே 24—

கடந்த திங்களன்று இங்கு சிவசேனையினர் நடத்திய ஊர்வலத்தையொட்டி 17 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

இவர்கள், சிவசேனை உறுப்பினர்களும் ஆதரவாளர்களுமாவார்கள்.

கலவரம் செய்ததற்காக இவர்களைப் போலீசார் கைது செய்து வழக்குத் தொடர்ந்திருக்கின்றனர்.

தமிழகக் குழந்தைகட்கு ஊட்டச் சத்துணவு

காப்பகங்கள் மூலம் ஆயிரம் இடங்களில் வழங்க ஏற்பாடு

கேர் நிறுவனத்தின் உதவியுடன் செப். 15-ல் திட்டம் துவங்கும்

சென்னை மே 23—

அமெரிக்க 'கேர்' நிறுவனத்தினர் 2 முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகளின் வளர்ச்சியை ஊக்குவிச்கும் பொருட்டு ‘முன்பள்ளிப் பயிற்சி விடுதி’கள்—குழந்தைகள் காப்பகம் (பால வாடிகள்)—அமைப்பதில் உதவ முன்வந்துள்ளனர்.

90 கிராம் அளவுள்ள பல சத்துணவு ஒவ்வொரு குழந்தைக்கும் மாதம் 22 நாட்கள் அளிக்கப்படும்.

காப்பகத்திலுள்ள ஒவ்வொரு குழந்தைக்கும், காப்பகத்தில் இல்லாத குழந்தை ஒன்று ஒரு கர்ப்பிணி அல்லது பால் கொடுக்கும் தாய் இரண்டு—ஆக கூடுதலாக இரண்டு பேருக்கு என்ற விகிதத்தில் — அதாவது மொத்தம் 3 பேருக்கு ‘கேர்’ நிறுவனம் இந்தச் சத்துணவை அளிக்கும்.

தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு இத்திட்டம், துவக்கக் கட்டமாக செயல்படுத்தப்படும்.

1,000 இடங்களில் இம்மாதிரி நிறுவனங்கள் வலுவுடன் இயங்க அரசு வழிவகை செய்யும்.

காப்பகங்கள் அமைக்கும் இடங்கள் கிராம வளர்ச்சி நெறியாளராலும் பெண்கள் நல இயக்குநராலும் தேர்ந்தெடுக்கப்படும்.

இந்த 1,000 நிறுவனங்களுக்கும் நிலையான கட்டிடங்கள் அமைக்கவும், கட்டிடம் ஒன்றுக்கு ரூ. 3,500 வீதம் ‘கேர்’ நிறுவனம் நன்கொடையாக வழங்கும்; பொது மக்கள் ரூ 1,250 நன்கொடையாக வழங்கவேண்டும்.

தற்போது செயல்படும் சுமார் 1,000 குழந்தைகள் காப்பகத்திற்கோ அல்லது புதிய காப்பகங்களுக்கோ இந்த மானியம் பயன்படுத்தப்படும்.

அரசுக்கு இந்த காப்பகத் திட்டத்தினுல் சுமார் ரூ. 22 இலட்சம் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது; இதில் பாதி, மக்கள் நன்கொடையாக இருக்கும்.

இத்திட்டம் தமிழக அரசு கிராம வளர்ச்சித் திட்ட இயக்குநரால் செயல்படுத்தப்படும்.

இவ்வளவு பரந்த அளவிற்கு இந்தியாவில் 'கேர்' நிறுவன உதவியுடன் துவங்கப்படும் திட்டம் இது தான்.

இத்திட்டம், வரும் செப்டம்பர் 15-ம் நாளிலிருந்து இயங்கும் எனத் தெரிகிறது.

சற்றே சிந்தியுங்கள்!

தமிழகத்தில் இவ்வாண்டு மார்ச் 31 முடிய அறுவைச் சிகிச்சை பெற்றுக் கொண்டவர்களின் எண்ணிக்கை **6,79,990**

இவர்களில் ஆண்கள் 6,39,259
பெண்கள் 40,731

இவர்கள் நல்வாழ்வு வாழ்ந்து வருகின்றனர்; நீங்களும் இவர்களை ஏன் பின்பற்றக் கூடாது?

மூன்று குழந்தைக்கு மேலுள்ள தாய்—தந்தையர்கள் இதைப் பற்றிச் சிந்தித்து அருகிலுள்ள குடும்பக் கட்டுப்பாட்டு நிலையத்திற்குச் சென்று தேவையான விவரங்களைப் பெற்று அறுவைச் சிகிச்சை செய்துகொண்டு, நலமோடு வாழ்ந்து

நாடு செழிக்க உதவுங்கள்!

லூப் மற்றும் இதர கருத்தடைச் சாதனங்களைப் பற்றிய விளம்பரத்தை எதிர்பாருங்கள்.

மாநிலக் குடும்ப நலத் திட்ட அமைப்பு—
சுகாதார குடும்ப நலத் திட்ட இயக்குநர்
அலுவலகம், சென்னை-6.

தமிழக மின் குழு

விளம்பர அறிக்கை

கீழ்க்காணும் பொருட்களை வழங்குவதற்கான முத்திரையிட்ட விலை ஒப்பங்கள் (Sealed Tenders) அடியில் கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகின்றன. விலை ஒப்பங்கள் 12—6—68-ந் தேதி பிற்பகல் 1 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

வரிசை எண்	சாற்றுக் குறிப்பு எண்	பொருட்களின் விவரம்	தேவைப்படும் அளவு
1.	TRP 3/68–69	24' நீளமுள்ள காங்கிரீட் சம்பங்களுக்கான இரும்புக் கம்பிகளினுலான கிரில்	600 நம்பர்கள்
2.	TRP 4/68–69	‘பி’ டைப் டிஸ்டிரிபூஷன் பெட்டிகள்	800 நம்பர்கள்
3.	TRP 5/68–69	கருங்கல் ஜல்லி அளவு ½"×¾"	400 யூனிட்டுகள்

மேற்படி பொருட்களைப் பற்றிய குறிப்புகள், ஏனைய நிபந்தனைகள் அடங்கிய பிரதிகளை (Tender Specification Forms) பிரதி ஒன்றுக்கு விற்பனை வரி உட்பட ரூ. 5·15 வீதம் (திருப்பிப் பெறக்கூடியதல்ல), ‘தலைமைக் கணக்காயர் (செலவுப் பிரிவு), திருச்சி மின் அமைப்பு, மன்னார்புரம் திருச்சி-1’ அவர்களிடம் ரொக்கமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். மணியார்டர் கூப்பனில், தேவையான சாற்றுக் குறிப்பு எண் தெளிவாகக் குறிப்பிடப்படாமல் இருந்தால், மணியார்டர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

விலை ஒப்பங்கள் 12—6—68-ந் தேதி பிற்பகல் 3-மணிக்கு, அவ்வமயம் வந்திருக்கும் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். குறித்த காலத்திற்குப் பின்னர் வந்து சேரும் விலை ஒப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

மேற்கண்ட பொருட்களை வழங்குவதற்கான உத்தரவை ஒருவருக்கோ அல்லது பலருக்கோ கொடுக்கவும் எந்த ஒருவருடைய விலை ஒப்பத்தையோ அல்லது அத்தனை பேர்களுடைய விலை ஒப்பங்களையுமோ நிராகரிக்கவும் அடியில் கையொப்பமிட்டவருக்கு உரிமையுண்டு.

பிரதிகள் வேறு நபருக்கு மாற்றிக்கொள்ளக்கூடியதல்ல. தபாலில் வரும் போது பிரதிகள் தவறிவிட்டால் அதற்கு இந்தக் குழு பொறுப்பாகாது.

மன்னார்புரம்,
தபால் பெட்டி எண் 51,
திருச்சி - 1

மேற்பார்வைப் பொறியாளர்,
திருச்சி மின் அமைப்பு

தமிழக மின் குழு

விளம்பர அறிக்கை

கீழ்க்காணும் பொருள்கள் சப்ளை செய்வதற்கு ஸ்பெசிபிகேஷனில் கண்டுள்ள முடிவு தேதிக்குமுன் கீழே ஒப்பமிடப்பட்டுள்ளவரால் அரக்கு முத்திரையிட்ட டெண்டர்கள் வரவேற்கப்படுகின்றன.

டெண்டர் விதிகள் அடங்கிய ஒவ்வொன்றுக்கும் கீழே குறிக்கப்பட்டுள்ளபடி எம்.ஓ. மூலமாகவோ அல்லது ரொக்கமாகவோ, ‘அக்கவுண்ட்ஸ் ஆபீசர், பைக்காரா மின் திட்டம், கோயமுத்தூர்-12’ அவர்களிடம் செலுத்தி விண்ணப்பப் பாரங்கள் பெற்றுக்கொள்ளலாம். மேற்படி தொகை எந்தக் காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

தபால் போக்குவரத்தில் ஏற்படும் தவறுக்கு, தமிழக மின் குழு எந்தவிதப் பொறுப்பும் ஏற்காது.

டெண்டர் பாரங்களுக்கு விண்ணப்பிக்கையில், ஸ்பெசிபிகேஷன் எண், டெண்டர் விலை செலுத்தியதற்கான இரசிது எண் முதலியவற்றைத் தவருது எழுதி அனுப்ப வேண்டும். மேற்படி டெண்டர் பாரங்கள் பிறருக்கு மாற்றிக்கொள்ளத்தக்கதல்ல.

டெண்டர்கள் குறிப்பிட்ட முடிவு தேதியன்று மாலை 4·00 மணி அளவில் பரிசீலிக்கப்படுகையில் நேரில் கலந்துகொள்ள விருப்பம் உள்ளவர்கள் கலந்துகொள்ளலாம்.

வரிசை எண்	ஸ்பெசிபிகேஷன்	பொருள்	டேவணித் தொகை	ஸ்பெசிபிகேஷன் விலை	முடிவு தேதி
1. O.T.	2/68–69	தேச்கு மர மீட்டர் போர்டுகள் 18"×12"×5/8" (450×300×16 மி மீ.)	ரூ. 750	ரூ. 1 03	10–6–68
2. O.T.	3/68–69	தேக்கு மர மீட்டர் போர்டுகள் 14'×20"×5/8" (350×500×16 மி.மீ)	750	1·03	,,
3. O.T.	4/68–69	தேக்கு மர மீட்டர் போர்டுகள் 10"×4"×½" (250×100×12 மி மீ.)	200	1·03	,,
4. O.T.	5/68–69	கலாய் வளைவுகள் (G. I Bends) ¾", 1", 2"	750	1·03	11–6–68
5. O.T.	6/68–69	கலாய் வளைவுகள் (G. I. Bends) 1½", 2½", 3"	750	1·03	,,
6. O.T.	7/68–69	இருஉலோகப்பிடிப்புகள் (Bimetallic clamps) பலவித ரகங்கள்	500	5·15	,,
7. O.T.	8/68–69	பாறைகளில் உடைக்கப்பட்ட நல்ல தரமான நீல நிற (granite) ஜல்லிக் கற்கள் அளவு ½ அங்குலம் முதல் ¾ அங்குலம் வரை இடம் : கோயமுத்தூர்	375	1·03	12–6–68

மேற்பார்வைப் பொறியாளர்,
பைகாரா மின் திட்டம்,
டாடாபாத், கோயமுத்தூர்-12

அமெரிக்க மக்களின் மனநிலை

அதிபர் ஜான்சனின் கவலை

வாஷிங்டன், மே 24—

"அமெரிக்காவில் சகிப்புத் தன்மை குறைந்து வருகிறது; வெறுப்பு உணர்ச்சிகளும் தலை தூக்கி நிற்கிறது; அதனுல் சட்டத்திற்கு மதிப்புக் குறைந்து வருகிறது"

என்று, அமெரிக்க அதிபர் ஜான்சன், அமெரிக்க வழக்கறிஞர்கள் சங்கத்தின் தலைவர்கள் சந்தித்த போது கருத்தறிவித்தார்; மேலும் அவர் குறிப்பிட்டிருப்பதாவது :—

"சர்வாதிகார மனப்பான்மையும் மக்களிடையே காணப்படுகிறது. இப்போது ஏற்பட்டுள்ள சோதனைகளைத் திறமையாகச் சமாளிக்காவிட்டால், அபாயம் ஏற்படும்; அவற்றைத் திறமையாகச் சமாளித்துவிட்டால் நன்மைகள் ஏற்படும்.

"வெவ்வேறு பரம்பரையினருக்கிடையேயும் — பணக்காரர், ஏழைகளுக்கு இடையேயும்—படித்தவர்களுக்கும் படிக்காதவர்களுக்கும் இடையேயும் மோதல்கள் ஏற்பட்டுள்ளன; இது, சனநாயக வழியல்ல. சட்டம் பலமாகவும் உறுதியாகவும் இயங்க வேண்டுமானுல், அதை விரும்புகிறவர்களும் செயல்படுத்துகிறவர்களும் ஒத்துழைக்க வேண்டும்."

தில்லை வில்லாளனுக்குப் பாராட்டு--தேநீர் விருந்து

பெண்ணாடம், மே 19—

இங்கு தோழர் எம். செல்வராஜ் தலைமையில் தோழர் தில்லைவில்லாளனுக்கும், நல்லூர் ஊராட்சி மன்றத் தலைவர் இலட்சுமணனுக்கும் பாராட்டுத் தேநீர் விருந்து நடைபெற்றது.

தோழர்கள் பழமலை, சிவராம சேது, இராமமூர்த்தி ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

தோழர்கள் தில்லைவில்லாளனும் இலட்சுமணனும் நன்றி தெரிவித்துப் பேசினார்.

சோழர் வீ இராமசாமி நன்றி நவின்ருர்.

பிரிட்டனில் ஊதிய முடக்கம்!

தொழிற் கட்சி அரசின் உறுதி

"எவ்வளவு இடர்பாடுகள் நேர்ந்தாலும், அரசு, தனது ‘விலைக் கட்டுப்பாடு, ஊதிய முடக்கம்’ ஆகிய கொள்கைகளை உறுதியாகப் பின்பற்றும்"

என்று பிரிட்டிஷ் நிதியமைச்சர் திரு. ராய் ஜென்கின்ஸ் கூறினுர்.

இலண்டனிலுள்ள வெளிநாட்டுப் பத்திரிகையாளர் சங்கம் அளித்த விருந்தில் கலந்துகொண்டு பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது :—

"தொழிற் கட்சி உறுப்பினர்களிடையே அரசின் இந்தக் கொள்கைக்கு நல்ல ஆதரவு இருக்கிறது; பெரும்பான்மையான உறுப்பினர் இந்தக் கொள்கையை வரவேற்றுள்ளனர்.

"பற்றுக்குறையிலிருந்து உபரி நிலைமை அடைய வேண்டுமானுல் சில பொருளாதார நடவடிக்கைகள்—சீர்திருத்தங்கள்—மேற்கொள்ள வேண்டும்; அந்த முயற்சியில் பிரிட்டன் இப்போது தீவிரமாக இறங்கியுள்ளது. உலகம் இதனை முழு அளவில் உணர்ந்துள்ளது."

மக்கள் சபையில் அங்கீகாரம்

பிரிட்டிஷ் அரசின் ஊதிய விலைக் கட்டுப்பாடுகளுக்கு மக்கள் சபை அங்கீகாரம் அளித்துள்ளது.

தொழிற் கட்சியில் பிளவு இருந்தபோதிலும், 35 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

தொழிற் கட்சிக்கு 70 வாக்கு பெரும்பான்மை இருந்தபோதிலும், கட்சி உறுப்பினர்களில் ஒரு பிரிவினர் வருமானத்துக்குச் சட்டப்பூர்வ கட்டுப்பாடுகளை எதிர்த்ததால், 35 வாக்குகள் வித்தியாசத்தில்தான்மசோதாநிறைவேறியது.

கடும் எதிர்ப்புக்குப் பின் வழிக்கு வருகிறது டெல்லி

மத்திய பள்ளிகளில் இந்தி திணிப்பு-- மறுபரிசீலனை செய்வதாக அமைச்சர் ஒப்பம்

புதுடில்லி, மே 23—

மத்தியக் கல்வித் துறையின்கீழ் இயங்கும் மத்தியப் பள்ளிகளில், பயிற்சி மொழித் தொடர்பாகப் பிறப்பிக்கப்பட்ட ஆணையை மறு ஆய்வு செய்ய மத்திய கல்வி அமைச்சர் டாக்டர் திரிகுண சென் ஒப்புக்கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

மத்திய பள்ளிகளில் ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாகக் கொண்ட வகுப்புக்களும், இந்தியைப் பயிற்சி மொழியாகக் கொண்ட வகுப்புக்களும் தனித் தனியே இருந்துவருவதை நீக்கிவிட்டு, இந்தி மட்டுமே பயிற்சி மொழியாக இருக்கச் செய்யும் வகையில் ஆணை பிறப்பிக்கப் பட்ட செய்தி ஏற்கனவே வெளியாகியுள்ளது.

இதற்குத் தென்னகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கல்வியமைச்சரைச் சந்தித்து எதிர்ப்புக் தெரிவித்ததும் நினைவிருக்கலாம்.

கேரளக் கல்வியமைச்சர் திரு. முகம்மது கோயா இன்று டாக்டர் திரிகுண சென்னைச் சந்தித்துக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தார்; ஆங்கிலத்தைப் பயிற்சி மொழி நிலையிலிருந்து ஒழித்துக் கட்டி இந்தியைத் திணிக்கும் இந்த முயற்சி கண்டு கேரள மக்கள் மிகவும் கொதிப்படைந்திருப்பதாகக் கூறினர்.

இதற்குப் பிறகுதான் டாக்டர் திரிகுண சென், மத்தியப் பள்ளிகளின் தலைமையகம் பிறப்பித்துள்ள அந்த ஆணையை, மறு ஆய்வு செய்வதாக ஒப்புக் கொண்டிருக்கிறர்.

இதற்கிடையில், 'அமைச்சரவை ஏற்கனவே செய்துள்ள முடிவுக்கு இந்த ஆணை ஒத்து இருக்கிறதா—முரணக இருக்கிறதா' என்பதை அறிய டாக்டர் சென் அமைச்சரவையைக் கலந்து பேசுவார் என்று தெரிகிறது.

கல்வி—தொழில் அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

மே 25 காலை 9 மணி: செயங்கொண்டம் — ஆசிரியர் சங்க ஆண்டுவிழா; 11 மணி: டி. பழூர்—ஊராட்சி ஒன்றிய விவசாயக் கிடங்குத் திறப்புவிழா; பகல் 12-30 மணி: மீன்சுருட்டி—உயர்நிலைப் பள்ளிக் கட்டிடத் திறப்புவிழா; 3 மணி: வாரியங்காவல் — உயர்நிலைப் பள்ளிக் கட்டிடத் திறப்புவிழா; மாலை 4 மணி: செந்துறை—ஊராட்சி ஒன்றியக் கட்டிடத் திறப்புவிழா; 6 மணி: டால்மியாபுரம்—சுரங்கப் பாதுகாப்பு வார விழா; 8 மணி: அரியலூர்.

அமைச்சர்

மு. கருணாநிதி உருவச் சிலை

பிறந்த நாளன்று சென்னையில் திறக்கப்படும்

சென்னை, மே 23—

தமிழகப் பொதுப்பணித் துறை அமைச்சரும் தி.மு.க. பொருளாளருமான திரு. மு. கருணாநிதி அவர்கட்குத் தமிழகத் தலைநகரில் சிலை அமைத்திடத் திட்டமிட்டு, அதற்கென ஓர் குழு அமைத்துத் தோழர்கள் பணியாற்றிவருவது அறிந்ததே.

இந்தச் சிலை அமைப்பு வேலை தொடங்கி சுறுசுறுப்பாக நடைபெற்று வருகிறது.

திரு. கருணாநிதி அவர்கள் பிறந்த நாளான ஜூன் 3-ம் நாள் சிலையைத் திறந்து வைக்க ஏற்பாடாகியுள்ளது.

மவுண்ட்ரோடில் ஜெமினி ஸ்டுடியோவுக்கு எதிரிலுள்ள வட்டப் பூங்காவில் இந்த உருவச் சிலை அமைக்கப்படுகிறது.

ரூ. 30,000 செலவில் உருவாக்கப்பட்டுள்ள ஆறரை அடி உயர வெண்கலச் சிலை, ஒன்பது அடி உயர பிடத்தின் மீது நிறுவப்படும்.

"கோ. ஆப்டெக்ஸ்"
எல்லா வகை கைத்தறித் துணி விற்பனையின் பேரில் அரசாங்க
விசேஷ தள்ளுபடி
10%
25-5-68 முதல் 8-6-68 வரை
இந்தவிசேஷதள்ளுபடி இந்தியாவெங்கிலுமுள்ள எல்லா "கோ-ஆப்டெக்ஸ்" விற்பனை நிலையங்களிலும், பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலும் கிடைக்கும்.
தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்,
சென்னை-8
ELEGANT

அண்ணு தலைமையில் மதுரை முத்து வீட்டுத் திருமணம்

பி. டி. இராசன் நடத்திவைத்தார்--- அமைச்சர்கள் வாழ்த்துரைத்தனர்

மதுரை, மே 23—

மதுரை மாவட்ட தி. மு. கழகச் செயலாளரும், சட்டமன்ற மேலவை உறுப்பினருமான தோழர் எஸ். முத்து அவர்களின் மகள் செல்வி: மாலைமணிக்கும்—விளாத்திகுளம் ஏ. ஆர். கருப்பசாமி அவர்களின் மகன் செல்வன்: பாக்கியராமனுக்கும், தமுக்கம் கலையரங்கில் காலை 10-மணியளவில், பேரறிஞர் பெருந்தகை அண்ணு அவர்களின் தலைமையிலும், திரு. பி. டி. இராசன் அவர்கள் முன்னிலையிலும் திருமணம் நடைபெற்றது.

மணமக்களை மாலை மாற்றிக் கொள்ளச் செய்து திருமணத்தை அறிஞர் அண்ணு அவர்கள் நடத்தி வைத்தார்.

பின்னர் மணமக்களை வாழ்த்திப் பொதுப் பணி அமைச்சர் மு. கருணாநிதி, உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன், உள்ளாட்சித் துறை அமைச்சர் மா. முத்துசாமி, பொதுநலத் துறை அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா, சட்டப் பேரவைத் தலைவர் சி. பா. ஆதித்தனர், மற்றும் கழக நாடாளுமன்ற—சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டச் செயலாளர்கள் ஆகியோர் பேசினர்.

பின்னர் பி. டி. இராசன் அவர்கள் பேசியதும், அண்ணு அவர்கள், மணமக்களை வாழ்த்திப் பேசினர்.

திரு. எஸ். முத்து எம்.எல்.சி. அவர்கள் நன்றி கூறினர்.

'விவேகத்துடன் செலவிடாததன் விளைவை அனுபவிக்கிரேம்'

'திட்டப் பணிகள் இல்லாதபோதும் தமிழக அரசு ஆற்றும் சிரிய பணி'

மதுரையில் அமைச்சர் மு. கருணாநிதி விளக்கம்

மதுரை, மே 23—

"மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் வாயிலாகப் பெருந் தொகை செலவிடப்பட்டபோதிலும், நாடு முன்னேறவில்லை; இதற்குக் காரணம், விவேகமான முறையில் பணம் செலவழிக்கப்படவில்லை என்பதுதான்"

என்று பொதுப்பணி அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் கருத்தறிவித்தார்.

மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியத்துக்காக ரூ. 85 ஆயிரம் செலவில் கட்டப்பட்ட புதிய கட்டடத்தை திரு. கருணாநிதி திறந்து வைத்தார்.

விழாவில் அமைச்சர் மு. கருணாநிதி பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது:—

"நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருகிறது; வறுமை நீடிக்கிறது; 'நாடு முன்னேறவில்லை' என்பதனை இவற்றல் அறியலாம்.

"இப்போது எவ்விதத் திட்டமும் இல்லை; எனவே, வளர்ச்சித் திட்ட நடவடிக்கைகளும் இல்லை. நான்காவது ஐந்தாண்டுத் திட்டமோ இன்னும் பரிசிலனைக் கட்டத்திலேயே இருந்துவருகிறது.

"என்றுலும், தமிழக அரசு, இருக்கின்ற நிதி வசதிகளை விவேகத்துடன் செலவழித்து வருகிறது.

"உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு உழவர்களுக்கு உதவி செய்யும் வகையில் தேவையான திட்டங்களையெல்லாம் தீட்டி அவற்றை முடித்தும் வருகிறது."

விழுப்புரத்தில் முஸ்லிம் லீக் மாநாடு

தமிழக -- கேரள அமைச்சர்கள் பங்கேற்பு

விழுப்புரம் வட்ட முஸ்லிம் லீக் அரசியல் மாநாடு 26—5—68 அன்று விழுப்புரம் வடக்குத் தெரு வாலாஜா திடலில் அமைந்துள்ள மௌலானு முகம்மது அலி நினைவுப் பந்தலில் காலை 9-மணி முதல் இரவு 12-மணி வரை நடைபெறும்.

காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் எம்.பி. தலைமை வகிப்பார்: கேரளக் கல்வியமைச்சர் சி. எச். முகம்மது கோயா கொடியேற்றுவார்; சென்னை மேயர் டாக்டர் அபிபுல்லா பேக் மாநாட்டைத் திறந்துவைப்பார்.

தமிழகப் பொதுப் பணித்துறையமைச்சர் திரு. மு. கருணாநிதி, தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம், சுதந்தராக் கட்சிச் செயலாளர் திரு. எஸ். எஸ். மாரிசாமி, திரு. கி. மனேகரன் எம்.பி., திரு. ஏ. கே. ஏ. அப்துல் சமது எம்.பி., மற்றும்—லீக், கழகச் சட்டமன்ற -- நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்கின்றனர்.

இசை முரசு நாகூர் அனிபா, இசைமணி சென்னை யூசுப் ஆகியோரின் இன்னிசை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

காலை 7-30 மணிக்கு திரு. வி. கே. பாசல்கான் எம்.சி. தலைமையில் மாபெரும் ஊர்வலம் புறப்படும்.

14,000 பள்ளி ஆசிரியர்கட்குச் சீட்டு கிழிந்தது!

ஆந்திர அரசின் உத்தரவுக்குக் கடும் எதிர்ப்பு

ஐதராபாத், மே 24—

ஆந்திரத்தில் மாவட்ட ஆட்சி மன்றங்கள், ஊராட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்கள் ஆகியவற்றின் நிர்வாகத்தில் உள்ள துவக்க — உயர்நிலைப் பள்ளிக்கூடங்களில் பணியாற்றும் 1,50,000 ஆசிரியர்களில் 14,000 ஆசிரியர்கள் அண்மையில் மாநில அரசு பிறப்பித்த ஓர் ஆணையின் காரணமாக வேலை இழப்பர்.

மாநிலத்திலுள்ள ஆசிரியர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் நிருபர்களிடம் பேசுகையில், 'தற்காலிக ஆசிரியர்களை யெல்லாம் ஆட்குறைப்புச் செய்வது என்று அரசு பிறப்பித்த உத்தரவு காரணமாக 15 ஆண்டுக்கு மேல் வேலை பார்த்த ஆசிரியர்கள்கூடப் பாதிக்கப்படுவர்' என்று கூறினர்.

அரசின் உத்தரவு இந்தக் கல்வி ஆண்டு இறுதியிலிருந்து நடைமுறைக்கு வருகிறது.

"ஓர் ஆசிரியருக்கு 30 மாணவர்கள் என்ற அடிப்படையில் அதிகப்படியாக இருக்கக் கூடிய ஆசிரியர்களின் எண்ணிக்கை பற்றி அரசு போட்டுள்ள கணக்கு எதேச்சாதிகாரமானது" என்று கூறினர்.

"அரசின் உத்தரவு செயல்படுத்தப்பட்டால், கிராமப் பகுதிகளில் பல பள்ளிக்கூடங்களை மூட வேண்டியிருக்கும்" என்றும் அவர்கள் கூறினர்கள்.

திருச்சி மாவட்ட தி. மு. க. பிரதிநிதிகள் கூட்டம்

திருச்சி மாவட்ட தி.மு.க. பிரதிநிதிகள் கூட்டம், 26—5—68 பிற்பகல் 3 மணிக்கு திருச்சி நகரச் சத்திரத்தில் நடைபெறும்; அதுபோது, அமைச்சர் கருணாநிதி பிறந்த நாள் விழா—அறிஞர் அண்ணு சிலைத் திறப்பு—மற்றும் செயலாளரால் கொண்டுவரப்படும் பிரச்சினைகள் பற்றி ஆராயப்படும்; பிரதிநிதிகள் தவருது கலந்து கொள்ளுமாறு மாவட்டச் செயலாளர் அன்பில் தர்மலிங்கம் கேட்டுக்கொள்கிருர்.

தொழில் துறையில் அமைதி காண்பதற்குத் திட்டம்

தகராறுகளைத் தீர்ப்பதற்கு நிரந்தரமான வழிவகைகள் காண்பதற்கும் முயற்சி

தொழிலாளர்--தொழிலதிபர் மாநாடு சென்னையில் நடைபெறும் -- அமைச்சர் செ. மாதவன் அறிவிப்பு

மதுரை, மே 23—

"தொழில் அமைதியைக் காக்கவும், தொழில் தகராறுகளைத் தீர்க்கவும் நிரந்தரமான வழிவகைகளைக் காண்பதற்காகத் தொழில் அதிபர்கள் - தொழிலாளர்கள் அடங்கிய மாநாட்டை ஜூன் 4, 5-ம் நாட்களில் சென்னையில் கூட்டுவதற்குத் திட்டமிட்டிருக்கிறேன்"

என்று சட்டத்துறை அமைச்சர் செ. மாதவன் அவர்கள், இங்கு ஆலைத் தொழிலாளர் கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

"தீர்க்கப்படாமல் இருக்கும் தொழில் தகராறுகள் உட்பட அத்தனைப் பிரச்சினைகளையும் இம்மாநாடு விவாதிக்கும்; அவசியமானல், விரைவான இறுதித் தீர்வு காண்பதற்காகத் தொழில் தகராறுகளை நடுவர் தீர்ப்புக்கு விடுவது பற்றியும் இம்மாநாடு விவாதிக்கும்.

"உற்பத்தி அதிகரித்து அதன் மூலம் வேலைவாய்ப்பு பெருகிட ஆலை அதிபர்களுக்கு மாநில அரசு தனது அதிகாரத்துக்கு உட்பட்ட வரையில் இயலக்கூடிய உதவிகளைச் செய்யும்."

பெஸ்ட் அண்டு கோ தொழிலாளர் வேலைநிறுத்தம்

சென்னை, மே 24—

சென்னை—தொண்டையார்பேட்டையிலும், திருவொற்றியூர் பகுதியிலும் பெஸ்ட் அண்டு கம்பெனிக்குச் சொந்தமான ஆறு தொழிற்சாலைகளிலும் பணியாற்றும் சுமார் 1000 தொழிலாளர்கள் 23—5—68 பிற்பகல் 3-30 மணி முதல் வேலைநிறுத்தம் செய்துள்ளனர்.

"வேலைநிறுத்தம் அமைதியாக நடைபெறுகிறது" என்று அறிவிக்கப்படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்பெறுவது.